★ விலை ரூபா 1:25

ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

வார 26 கிழமை 18 நாள் 27 இதழ் 75
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 30—4—84

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
30-4-1984

"ராணுவத்தை அனுப்பினால்

இலங்கைத் தமிழருக்கு பேரபாயம் ஏற்படும்"

இந்திய பாதுகாப்பு அமைச்சர் அச்சம்

(சென்னை)

"இலங்கை ராணுவம் யாழ்ப்பாணத்தில் முற்றுகை போட்டுள்ள இந்தச் சமயத்தில் தமிழ் மக்களுக்பாதுகாப்பதற்கென இந்திய ராணுவத்தை அங்கு அனுப்பினால் அங்குள்ள 15 லட்சம் தமிழருக்கும் பேராபத்து ஏற்படும்" என்று இந்திய பாதுகாப்பமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்று தஞ்சாவூரில் பத்திரிகையாளர் மத்தியிலே கூறினார்.

இலங்கைத் தமிழர்களுக்காப்பாற்ற இந்திய ராணுவத்தை அங்கு அனுப்பவேண்டுமென்று

(8-ம் பக்கம் பார்க்க)

சர்வதேச மனித உரிமைகள் இயக்கம் விடுத்துள்ள கோரிக்கை

வெலிக்கடைச் சிறைச் சம்பவம்: பாரபட்சமற்ற விசாரணை வேண்டும்!

(சென்னை)

கடந்த வருடம் ஜூலை மாதம் இடம்பெற்ற கலவரங்களின் போது வெலிக்கடைச்சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ்த்தீவிரவாத இளைஞர்கள் 53 பேர் படுகொலை செய்யப்பட்டது குறித்து பாரபட்சமற்ற சுயேச்சையான அமைப்பொன்று விசாரணை நடத்தவேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

லண்டனில் தலைமையகத்தைக்கொண்டியங்கும் இந்த ஸ்தாபனம் நேற்று சென்னையில் வெளிந்த அறிக்கையிலேயே மேற்படி கருத்தை வலியுறுத்தியுள்ளது.

கடந்த வருடம் ஜூலைமாதம்

(8-ம் பக்கம் பார்க்க)

நெல்லியடியில் மீண்டும்

தலைதூக்கியுள்ள கோஷ்டி மோதல்

(சரவெடிகள்)

நெல்லியடியில் நேற்று இரு கோஷ்டியினருக்கிடையில் ஏற்பட்ட மோதலால் இப்பகுதி பெரும் பதற்றமடைந்தது.

இப்பகுதியில் திடீரென ஏற்றத்தில் வந்த ஆயுதப்பாவனையைக் கண்டதும் இக்கலவரம் சற்றுத்தணிந்த போதிலும் ஸ்தலத்தை செல்பதில் மீண்டும் குரும்பித்தது.

கடந்தவாரமும் குரும்பித்த இருகோஷ்டிகளின் முயற்சியால் தணிக்கப்பட்டிருந்த இந்த தகராறு மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

உலகவங்கியின் நிதி உதவி

(சென்னை)

உலகவங்கியின் நிதி உதவியு[illegible] மிகாரம் வழங்கப்படாத இடங்களுக்கு அதிக ஆயிடு மிகாரம் வழங்கப்படவுள்ளது.

அதிலிப்பன், புளோப்பன், சேரன்பற்று மாசார், பேசாலை சாய்கேளி ஆகிய இடங்களுக்கே மிகாரம் வழங்கப்படவுள்ளது.

இவ்தொகை மாவட்ட ஒதுக்கிய பிரமிய அபிவிருத்தி திட்டத்தில் மேற்கொள்ளப்படும் இவ்வேலைக்கு ஏறக்குறைய 44 லட்சம் ரூபா வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வல்வையில் நடந்த

துப்பாக்கிப் பிரயோகத்தில் கார்ச் சாரதி காயம்

(யாழ் மாவிட்டபுரம் நிருபர்கள்)

வல்வெட்டித்துறையில் நள்ளிரவு வரையில் நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கார் சாரதி ஒருவர் பின்னேரம் (மாலை 27) காயமடைந்த யாழ். பேரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

நேற்று மாலை இருக்கு ஆகு பத்திரிகையில் சந்திரமோகன

சேதமடைந்த இவரது கார், வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பில் உள்ளது.

நேற்று முன்தினம் இரவு 12.45 மணியளவில் உறவினர்

(8ம் பக்கம் பார்க்க)

மீன் விலை அதிகரிப்பு

மீனவர் கடலுக்குச் செல்ல அச்சம்

(சரவெடிகள்)

வடபகுதியில் விற்பனைசெய்யப்படும் மீனின் விலை அதிகமாகவே அதிகரித்து வருகிறது.

வடபகுதிக் கடற்றொழிலாளர்கள் நாற்பொழுது மீன்பிடிக்கச் செல்வது குறைவாக உள்ளதாலேயே இவ்விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகக் கணிப்பு வலைகள் மற்றும் லாக்கப்பட்டுள்ளதாலும் அடையில் சூறை சுழலில் வடமேற்கிலிருந்து வீசிய பலத்த காற்றாலும் கடலுக்குச் சென்ற இப்பகுதி மீனவர்கள் அஞ்சுவதாகக் கூறப்படுகிறது

யாழ் நகர்

பெற்றோல் நிலையத்தில் கொள்ளை

(கா. யோகநாதன்)

யாழ் நகரிலுள்ள பெற்றோல் நிலையத்தில் 'எக்ஸாக்' இயக்கத்திற்குத்தான் 'எக்ஸாக்' கூறி துப்பாக்கியுடன்சென்ற இரு இளைஞர்கள் 4315 ரூபாவை நேற்று கொள்ளையடித்துள்ளனர்.

கஸ்தூரியார் வீதி கோவில் வீதி சந்தியிலுள்ள 'ஸ்ரீலங்கா கூட்டுறவு சந்தைத்தொகுதி' சங்கேனைத்தில் பெற்றோல் நிலையத்தில் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் இக் கொள்ளை நடந்தேறியதாக கூறப்படுகிறது.

இரு இளைஞர்கள், அங்கு வந்தார்களும் ஒருவர் பெற்றோல் நிலையத்திற்குள் சென்று வையுடன் சென்று 'பிறீஸ்' வேட்டாரவும், மற்றவர் துப்பாக்கியைக் காட்டி, கல்லே நின்ற ஊழியரையும் இரண்டு பெண்களையும் பயமுறுத்தி விட்டு, லாச்சியிலிருந்த 4315 ரூபாவை கொள்ளையடித்து சென்றதாகவும் இச்சம்ப வம் பற்றி கூறப்படுகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)

★ கொழும்பிலிருந்து 192 கடல் மைல்கள் தூரம்

திருவனந்தபுரத்தில் புதிய இந்தியவிமானப்படைத் தளம்

(கொழும்பு)

தென்னிந்திய மாநிலமான கேரளாவிலுள்ள திருவனந்தபுரத்தில் புதிய இந்திய விமானப்படைத்தளமொன்று அமைக்கப்படவுள்ளது. இப்புதிய தளம் கொழும்பிலிருந்து 192 கடல் மைல்கள் தொலைவில் அமைந்திருக்கும்.

நம்பர்' என்ற தென்னிந்தியாவில் நிலைகொண்டிருந்த விமானத்தளமே இப்போது திருவனந்தபுரத்திற்கு மாற்றப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய விமானப்படைத்தளம் [illegible] கொண்டிருக்கும் [illegible] கடற்படைத்தளத்துடன் இணைந்து செயற்படவும் இப்புதிய தளம் கூறப்பட்டது.

இப்புதிய விமானத்தளம் பற்றி இந்திய பாதுகாப்பு அமைச்சர் இம்மாத ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். எனினும் அவர் அதுபற்றி

(8ம் பக்கம் பார்க்க)

ராணுவம்மீதான குண்டுத்தாக்குதல்

'புலிகள்' இயக்கம் உரிமை கோருகிறது

(யாழ்ப்பாணம்)

கடந்த 9ம் திகதி யாழ் ஆஸ்பத்திரியில் இராணுவத்தினர் மீது வெடிகுண்டு தாக்குதல் நடாத்தியதாக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம் உரிமைகோரி துண்டுப்பிரசுரம் வெளியிட்டுள்ளது 10ம் திகதி பருத்தித்துறை பொலிஸ்நிலையம் தாக்கப்பட்டதற்கும் தாமே பொறுப்பு என அவ்வியக்கம் உரிமைகோரியுள்ளது.

புலிகள் இயக்கம் சிங்கள பொலிசுக்கெதிராக ஆயுதம் ஏந்தியதன் பின்னர் நடாத்திய முதல் தாக்குதல் இதுவாகும்.

இத்தாக்குதலில் ஒரு சிங்கள பிரயாணியின் பெயருடன் வெளியிடப்பட்டுள்ள அத்துண்டுப்பிரசுரத்தில் மேலும் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழ விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடிவருவதாகவும் தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வுக்காக இராணுவத்தினரை வெளியேற்றும் வரை தமது போராட்டம் தொடருமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

மீசோரம் மாநிலத்தில் இந்திரா காங். வெற்றி

(புதுடில்லி)

மீசோரம் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பதவியை கைப்பற்றியுள்ளது.

மொத்தமுள்ள 40 தொகுதிகளில் 17 தொகுதிகளில் இந்திரா காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது. மீசோரம் மாநாட்டுக்கட்சி 8 இடங்களிலும் வேறு இரு கட்சிகளும் வெற்றி பெற்றுள்ளன.

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

விற்பனைக்கு

இரண்டு மிளகு கருக்குத் தொழிற்சாலைக்கு வாரிப்பு வேண்டியும், மீனுக்கு வேண்டியும் (Polishing) தனுபவ முடையோர் உடன் தேவை. வேலைநாடிகளின் நேரில் சமுகமளிக்கவும். ஜோசப் இன்டஸ்ரீஸ், குமாரசுவாமி புளவர் ரோடு, கொக்குவில். 2056

கோப்பாய் தபாற்தோட்டருக்கு அண்மையில் நல்ல தோட்டக்காணி வீடுடன் கூடியதாக பத்துப் பரப்பு விற்பனைக்குண்டு. விபரம் கீழே: M. பரஞ்சோதி, V C. வேள், கோப்பாய் தெற்கு. 2068

மானிப்பாய் கதிரேசன் செல்லமுத்து வீதியில் வீடு கட்டக்கூடிய முன்று (3) பரப்புக் காணி விற்பனைக்குண்டு விருப்புவோர் கீ பாலசுந்தரம், புடவைக் கைத்தொழில் நிலையம், சங்கானை, யாழ்ப்பாணம். அதைத இணுவில் ரோட், மானிப்பாயில் வராத இல்லத்தில் தொடர்பு கொள்ளவும். 2060

கல்வி

க பொ. த. (சா. த) குறைந்த வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் விஞ்ஞானம் சேறு விசேட கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10 ஆசாரி பிழக்கு ஒழுங்கை, கண்டுக்குழி. 2038

எமது "ஆஞ்சநேயர் கூல் லெஸ்" கல்விச்சேவை மூலம் வீட்டில் இருந்தபடியே பிற குவிலிபிக்கி மொழியும் மிக இலகுவாகவும் ஆங்கிலம் கற்கலாம். விபரங்களுக்கு "மஸ்டர் செஷிஸ்" 37 (651) கண்டக்டர் வீதி, [கொழும்டன் இன்டர்நேஷனல் சந்தி] யாழ்ப்பாணம் தொலைபேசி: 22762. [2078]

தவறவிட்டது

மானிப்பாய் கூட்டுறவு சோப்பை வீதியில் எனது சொந்தப் புலைப்பட அல்பம் ஒன்றை தவறவிட்டு விட்டேன். இதனை கண்டெடுத்து வழங்குபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு:- க. முருகேசு ராஜா, மூளாய் மேற்கு, சுவிபுரம். 2072

கன்னுகம் பல நோ. கூ. சங்கம் (வரையுள்ளது) கன்னுகம் முக்கிய அறிவித்தல்

கன்னுகம் பல நோ. கூ. சங்கத்திற்கு புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட இசுசு விண்ட்ஸ்கிரீன் (Isuzu Windshield) லொறிக்கு புதிதாக கூடுகிறேப்பு செய்வதற்கு (Body) லொறி உடற் சோபு செய்பவர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்களை சங்க தலைமைப் பணிமனையில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 10-05-84 தகவல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்.
கன்னுகம் பல நோ. கூ. சங்கம்,
கன்னுகம்,
27-04-84. 2062

முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் இல: 83, சப்பல் வீதி காளஞ்செற்ற கிருஷ்ணா நல்லதம்பி தனசுந்தரம் என்பவரின் மரணசாதனத்தில் மரணச் சொத்தில் விடயத்தில்.

மரணமெய்தியவர்
இல: மரணசாதன நிர்வாகத்தின் சி/3781.

தனசுந்தரம் கைலாபெளை மீளாட்சியம்மா. இல: 83 சன்னதி, வீதி யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கக் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டதான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எதிர்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1984ம் ஆண்டு மாசி மாதம் 28ம் நாளன்று அதில் அதரிணைக்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதிவுப்பட்டுள்ளதெனவும் இந்தார் அறிவிக்கப்படுகின்றது.

1984ம் ஆண்டு மாசி மாதம் 28ந் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைதல்:
மனுதாரின் சட்டத்தரணி
செ.மகேசன்
2086

முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம் இல 8 மணிக்கூட்டுவீதி காளஞ் செற்ற இராஜலிங்கம் செல்லையா என்பவரின் மரணசாதனத்தின் மரணச் சொத்தில் விடயத்தில்.

மரணமெய்தியவர்
இல: மரண சாதன நிர்வாகத்தில் } சி/3785
செல்லையா வைரவநாதன் இல. 8 மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கக் கொண்ட வழக்கு மேலேயுள்ள குறிப்பிடப்பட்டதான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எதிர்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1984ம் ஆண்டு பங்குனி மாதம் 12ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி
கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைதல்:
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
2035

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காளஞ்செற்ற முருகேசு பூபாலசிங்கம் என்பவரின் மரண சாதனமிக்கச் சொத்தில் விடயமாக. பூபாலசிங்கம் வைத்தெளை இராஜேஸ்வரி, இராஜ வலவு. இராஜ வீதி. திரு நெல்வேலி பிழக்கு யாழ்ப்பாணம்.

மனுதார்.

இல: சி/3779.

மேலேயுள்ள இலக்கக் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்த போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதரிணைக்க பின்னுறுதிக் கட்டளை பதிவுப்பட்டுள்ளதென இந்தார் அறிவிக்கப்படுகின்றது.

குறிப்பிடப்பட்ட ஆன எவரும் 1984 ஆண்டு மைமாசி மாதம் 18-ஆந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர் தோன்றி அல்லது பதிவப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படாதாகத் தெரிவதற்கு காரணம் காட்டுமாறு இந்தார் கேளைப்படுத்தப்படுகிறார்.

நீதிமன்றக் கட்டளைப்படி, 1984 -ம் ஆண்டு மாசி மாதம் 28 -ந் திகதி.

கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைவு:
இ. சிவகுப்பிரமணியம்
மனுதாரின் சட்டத்தரணி
19-1-84 2028

காரைநகர் ஐ. நோ. கூ. சங்கம்
வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம் அறிவித்தல்

6000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர முலம் விற்க உத்தேசம். 10-5-84 வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை கேள்விப் பத்திர விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மீளப் பெறும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்த வேண்டும். நிபந்தனைகளும், விபரங்களும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் மாவும் தலைவர், ஐ. நோ. கூ. சங்கம், காரைநகர். என்ற முகவரிக்கு அஞ்சல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இக் கேள்விப் பத்திரம் சம்பந்தமாக நிராகரிப்பதற்கு உரிமையுண்டு.

குறிப்பு:-
காரியாலயத்தில் ரூபா இருநூறு செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
ஐ. நோ. கூ. சங்கம்,
காரைநகர்.
27-4-84. 2070

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

கணி விற்பனைக்கு

மல்லாகம் பிரதான ரோட் ஓரமாக, கற்றுமதில் கொண்ட 5 பரப்புக் காணி வீடுடன் விற்பனைக்குண்டு. பஸ்தரிப்பதற்கு சவலபமான, குளிர்மையான, வேறு, பலசரக்குக் கடைக்கு ஏற்ற வசதிகளும் உண்டு. விபரங்களுக்கு:

இ. பாலசுப்பிரமணியம்,
சட்டத்தரணி,
52, கைலை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22334. (2077)

பெண் ஆயுர்வேத வைத்தியர் தேவை

சர்வோதய இயற்கை வைத்தியசாலை பிரிவிற்கு கித்த ஆயுர்வேத வைத்தியப்பட்டம் பெற்றவரும், குறைந்தது 3வருட வைத்திய அனுபவமுள்ளவருமான பெண் வைத்தியர் ஒருவர் தேவை. தகுந்தவேதனமும், தங்குமிடம் உணவு வசதிகளும் அளிக்கப்படும்.

15-5-84க்கு முன் அமைப்பாளர், சர்வோதய மாவட்ட நிலையம், புங்குடுதீவு என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

சர்வோதயம்,
புங்குடுதீவு.
2079

யாழ் / சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. பூ. வெற்றிவேலு அவர்களின் சேவை நலன் பாராட்டுவிழா

மேற்படி விழா எதிர்வரும் 16-05-84 புதன்கிழமை நடைபெறவுள்ளது. அன்பான மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் இவ்வறிவித்தலை ஏற்று விழாச் சிறப்புற அமைய மேலும் உதவி புரியுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

க. மகேஸ்வரன், அதிபர்.
க. சந்திரசேகரம், சி. துரைராசா, செயலாளர்கள்.
(2071)

உடை தயாரிப்பாளர் தேவை

சர்வோதய உடைதயாரிப்பு நிலையத்திற்கு பெண்களே தெரிவுசெய்யான உடைகள் தயாரிப்பதில் அனுபவமிக்க பெண்கள் தேவை. 35 வயதிற்குட்பட்ட பெண்கள் விண்ணப்பிக்கலாம். தகுந்த வேதனமும் தங்குமிடம் உணவுவசதிகளும் அளிக்கப்படும்.

10-5-84க்கு முன் அமைப்பாளர், சர்வோதய மாவட்டநிலையம், புங்குடுதீவு என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

சர்வோதயம்.
புங்குடுதீவு.
2078

31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் இராமு கந்தையா

(மலாயன் பென்ஷனியர் — புகையிரத இலாகா)

மலர்வு:- 27 - 6 - 1910

உதிர்வு:- 31 - 3 - 1984

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காய் பிரகாசித்து பண்பெனும் பாசத்தால் அமுத மொழி பேசி எம்மை உயர் செல்லும் உன்னத நிலையில் உருவாக்கிய ஆன்மா நற்கதியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மனைவி, மகன், மருமகள், பேரப்பிள்ளை.
"இலக்குமி பவனம்"
மாரிசன் போகுளாய்.
2050

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

நல்லையா நவரட்ணம்

கோழியகுளம்

தோற்றம்: 8-5-58

உதிர்வு: 30-4-83

நல்ல நீ பிரிந்த செய்தி எங்கள் மீளாத்துயரில் ஆழ்த்தி விட்டாய் துயர்க்கடலில் - உன் நினைவாலேயே வாடுகின்றோம்.

கண்ணீருடன் நீராடுகின்றோம்.

உன் ஆன்மா சாந்தமடையப் பிரார்த்திக்கும்
அம்மா, ஐயா, சகோதரசகோதரிகள்,
உற்றார் உறவினர்கள்.

கோழியகுளம் ஒமந்தை. 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990வரை ஆட்சியைநீடிக்க தட்சர் அரசு திட்டம்?

வாக்கெடுப்பொன்று நடத்தப்படலாம்!

லண்டன், ஏப். 29

பிரிட்டனில் ஆளுங் கட்சியான கன்சர்வேட் டிவ் கட்சி வாக்கெடுப்பு ஒன்றினை நடத்தி 1990-ம் ஆண்டு வரை ஆட்சியை நீடிக்கும் எண்ணத்தைக் கொண் டிருக்கிறதென அறிவிக் கப்பட்டது.

கடந்த ஆண்டு பெரும்பான் மைப் பலத்துடன் கன்சர்வேட் டிவ் கட்சி ஆட்சியைக் கைப் பற்றியது. உரிய தேர்தல் ஆண் டுக்கு ஒரு வருடத்திற்கு முன் னரே நடத்தப்பட்ட தேர்தலே அதுவாகும்.

அதனையடுத்து பிரிட்டிஷ் கன் சர்வேட்டிவ் கட்சி அதன் ஐந்தாவது ஆண்டு ஆட் சியைப் பூர்த்திசெய்தது. அப் போதே 1990 ம் ஆண்டு வரை ஆட்சியை நீடிக்கும் எண் ணத்தை அது கொண்டிருப்பது தெரியவந்தது.

கன்சர்வேட்டிவ் கட்சியின் இவ்வெண்ணம் நிறைவேறு வது கடினமென்றே கருதப்படு கின்றது. கடந்த பொதுத் தேர்தலில் பின்னர் புதிய தலை மையுடன் இயங்கும் பிரதான எதிர்க்கட்சியான தொழிற் கட்சி தற்போது குறிப்பிடத் தக்களவு செல்வாக்கைப் பெற் றுள்ளதென்பது தெரிவந்தி துள்ளது. (இ)

'காஞ்சிபுரம்' நகரில் யுனெஸ்கோ ஆய்வு!

சென்னை, ஏப். 29

தமிழ்நாடு 'காஞ்சிபுரம்' நக ரத்தில் ஐ. நா. விதான 'யுனெஸ்கோ' அமைப்பின் நீண்ட ஆராய்ச்சியொன்றுக்கு உட்படவுள்ளது.

இந்த ஆராய்ச்சியை இந்திய புதைபொருள் ஆராய்ச்சி நிறு வனமொன்றும் வரலாற்றுத் துறை நிறுவனமொன்றும் கூட் டாக மேற்கொள்ளவிருக்கின் றன.

'காஞ்சிபுரம்' நகர வரலாற் றுச் சான்றுகள், அதன் தொன்மை, நகர அமைப்பு' கலாசாரத் தொடர்புகள் என் பனபற்றிய ஆராய்ச்சிகளே இவ் 'யுனெஸ்கோ' ஆய்வில் மேற் கொள்ளப்படும்.

பல்லவர் புடைவரைக் கோயி லும் 'காஞ்சிபுரம்' பிரதான பெற்றது. இதன் இத்தொழில் பழமைவாய்ந்த தொன்றாகும். இதுபற்றியும் ஆராய்ச்சி நடத் தப்படுமென்று கூறப்பட்டது. இந்த ஆராய்ச்சிகளை எடுத்த கூறிற்குள் முடிவடையும். (இ)

மாஸ்கோ, ஏப். 29

அண்டவெளியில் ஆயிரம் ஒளி வருடங்களுக்கு அப்பால் கிரகமொன்றில் உயிர்வாழ் இனமொன்று காணப்படுவ தாகச் சோவியத் விஞ்ஞானி யான டாக்டர் பொரிஸ் பெஸ் சேரே தெரிவித்துள்ளார்.

இந்த விஞ்ஞானி 'மாஸ்கோ நியூஸ்' என்ற பத்திரிகைக்கு வழங்கியுள்ள பேட்டியொன் றிலேயே இத்தகவலைத் தெரி வித்துள்ளார்.

டாக்டர் பெஸ்சேகோ அண்டவெளியில் செயற்கைச் சமிக்ஞைகளை இவை தெரிவி துள்ளனவென்றும், அவை மின்மீன் ஒளிவீசும் வடி வங்களில் வருவதாகவும் அறிவித்துள்ளார்.

அண்டவெளிக் கிரகமொன்றில் புதிய உயிர்வாழ் இனம்! சோவியத் அறிஞர் தகவல்

மனித இனத்தைவிட அறிவாற்றல் உடையதாம்!

இவரின் தகவல்களின்படி இந்த சமிக்ஞைகள் அண்ட வெளியில் இருக்கும் கிரக மொன்றில் உயிர்வாழும் இன மொன்றினுடைய தென்றும், இந்த இனம் இவ்வுலகின் மனித இனத்தைவிட மன வளர்ச்சி அறிவாற்றல் உடையதாக இருக்கவேண்டுமெனவும் அறி விக்கப்பட்டுள்ளது. (இ)

இல்லத்தரசிகளே! நீண்ட நாட்களுக்கு உணவுப் பதார்த்தங்களைப் பத்திரப்படுத்துங்கள் பிலிப்ஸ்.



இரட்டைக் கதவு குளிர்சாதனபெட்டி
இளவர்ணங்களில் உண்டு
தன்னியக்க பனிப்படிதல் நீக்கி கொண்டது.

உங்கள் தேவையை உணர்ந்தபின்னர்
உருவாக்கப்பட்ட குளிர்சாதனப் பெட்டி.
ஒற்றை, இரட்டை கதவுகளைக்கொண்டது
பனி படிந்து கொள்ளாதது.

ஏகப்பிரதிநிதிகள்:
ஹேய்லீஸ் லிமிட்டெட்.
காட்சி அறை - கொள்ளுப்பிட்டி. தொலைபேசி: 86958
தீர்வையற்ற சந்தை தொகுதி தரை மாடி. கடை இல. (2)

இலேசான முறையில்
பணம் செலுத்தும்
திட்டம் உண்டு



பனிப்பாடியாத
குளிர்சதனப்பெட்டி

ஒற்றைக்கதவு குளிர்சாதனப்பெட்டி.
பாதி தன்னியக்கப் பனி நீக்கி.

மேலுலைக்கு அதி உறைவாக்கி.

பனிப்பாடியாத
குளிர்சதனப்பெட்டி
இரட்டைக் கதவு - (தீர்வையற்ற விலை)

ZENITH

விலை- US $ 190 - இலிருந்து (ரூ. 11,575/-)

நாங்கள் பிலிப்ஸ் நிறுவனத்தோடு ஒன்றிணைந்து சிறந்ததையே உங்களுக்கு வழங்குவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிவாக்கு

மனிதன் அடைய வேண்டிய உயர்ந்தபொருள் அறிவு என்பர்; ஆனால் அது மட்டுமன்று, அறிவினும் மேற்ற அனுபவமே உயர்ந்தது.

—தோரோ

நமது நோக்கு

நிக்ஸன் - பிங்பொங் றீகன் - புன்னகை

"மனிதன் தன்னைத் தானே கொன்று ஒழித்துக் கொள்ளாமல் காப்பதுதான் நிரந்தர மனிதர் மாகாளர்களும் உள்ள முதல்டனை! அவர்களுடைய தலைவர்களும் ஒரு காலமே முதல்மை யான உடனடி பாகுபாடு" என்று முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்டர் கூறியிருக்கிறார்.

இரண்டாவது உலகமகா யுத்தத்தில் நேசநாடுகளின் ராணுவத்துக்குத் தலைமை தாங்கி மனித அழிவை நேரில் அனுபவித்த அமெரிக்கர் ஜனாதிபதி யுத்தத்தில் அவலத்தையும் சமாதானத்தின் அருமை யையும் நன்கறிந்தவர்.

அமெரிக்க மக்களின் நம் பிக்கைக்குப் பாத்திரமான இந்த அதி மனிதர் இந்தி யப்பிரதமர் நேருவை அமெரிக்காவில் பிரமல மக்களை முதலாவது (Columbia) கொலம்பியாவில் பாஷேற்ற உரையாற்றியபோது சமாதானம் பற்றிய குறிப்பிட்ட இன்றைய அமெரிக்க விவகாரங்களுக்கெதிரான கண்டனம் போல் தோன்றும்.

"ஒரு நாடுமற்ற நாடுகளோடு போட்டியிட்டு ஆயுதங்களைப் பெருக்குவதால் சமாதானம் நிலைக்காது. மற்ற நாடுகளைப்பற்றி உண்மையாய் அறிந்து நீதியான முறையில் அணுகி நடந்தால்தான் சமாதானம் நிலைக்கும்" என்பதே அன்றைய ஜனாதிபதியின் தெளிவான கருத்து.

இரண்டாவது உலக யுத்தத்தில் நேச நாடுகளுக்கு ஐரோப்பாவில் வெற்றி கிடைத்தும் ஆசிய மக்கள் வெற்றிக்குப் பெரிதும் பொறுப்பான பிரதமர் சர்ச்சில் சோர்ந்து வீடு திரும்பினார். யுத்தம் முடிவடைவதற்கு நடந்த பொதுத்தேர்தலில் தோல்வி இது.

யுத்தத்துக்கு உதவும் வீரம் சமாதான காலங்களுக்குத்தேவையில்லையென்ற வாதத்தால் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்த அட்லி (Atlee) பிரதமரானார். அதன் பின்னரே இந்திய சுதந்திரம்; ஆங்கில மக்களின் அரசியல் ஞானம் முதிர்ந்த நிலை அது.

ஜெர்மனியும் இத்தாலியும்-பிரபு ஜப்பானும் சேர்ந்த உலக சுதந்திரத்துக்கு உலைவைக்கமுனைந்தனர் என்ற பேரச்சத்தில் உருவான அமெரிக்க - ரஷ்ய ஒற்றுமை யுத்தம் முடிவதற் தொப்பென வீழ்ந்தது.

அன்று தொட்டு இன்று வரைக்குமாகமூப்பதவரு டங்களாக இழுபறிப்படும் அமெரிக்க - ரஷ்ய பிணக்கு இன்னும் எங்கேயில் உலக அரசியல் அரங்கில் பெரும் நிருகுதானங்களைக் கண்டு வருகிறது.

ஆயுதப் பரிசோனைப் போட்டியில் ஒருபுறம்; ஆயுதப் பெருக்கம் மறுபுறம். ஆபி யாவில் நடைபெறும் குதிரைப் போட்டி மூன்றும் உலகுக்கு மர்மமாகவே இருக்கிறது.

அரபிய தீபகற்பத்தில் அமைந்த முதலாளித்துவ— கம்யூனிஸ போராட்டங்கள் அரசியல் தந்திரிகளுக்கு வழிவகுத்தது. அவை வெற்றிகரமாக இதில் ஒன்று.

அப்பற்ற சுத்த கம்யூனிஸம் என்றும் அது மாபே தூய கிளர்ச்சிகளும் வேத மென்று சொல்லி சொல்லி வந்தது. சீன தேசத்தை விடுத்து வெளியே என்றும் சென்றால் நவசீன தந்தை மாசேதுங் ரஷ்ய ஜனாதிபதி குருசேவின் மரணச்சடங்கு களில் கலந்து கொள்ள மாஸ்கோசென்றதை ரஷ்ய-சீன கம்யூனிஸ்ட் உறவுக்கு ஒரு எதிர்காலம் டார 1953ல் பேசப்பட்டது.

பொதுவுடைமைக் கொள்கை உலகில் பரம்புவதற்கு இரு வல்லமை படைத்த நாடுகள் — ஐரோப்பாவில் ரஷ்யாவும், ஆசியாவில் சீனாவும் ஆன செய்யுமென்ற நம்பிக்கை நின்றது. இது சோதப காலம்.

இந்த நம்பிக்கை இன்று மோசம்போய் விட்டது ரஷ்ய-சீனப் பிணக்கு அதி கரித்து வந்தபோது அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் தனது அரசியல் தந்திர நிபுணர் கிஸிஞ்சர் (Kissinger) உதவியுடன் சீன உறவை 'பிங்பொங்' விளையாட்டில் ஆரம்பித்தார்.

விளையாட்டில் உதயமான நட்பு திரிவரத கம்யூனிஸ்ட் வாசேதுங் கூட்டியில விளையாட்டாகவே முடிந் தது.

இன்று சீனருக்கு நல்ல நெண்ணை விஜயத்தை மேற் கொண்ட ஜனாதிபதி றீகன் ஒரு பெரும் ஜோசனையாள சீனருடன் முக்கிய தலைவரான டெங்சியாபிங் அவர்களுக்கு அமெரிக்க ஆயுதங்களை உதவ முன் வந்துள்ளார். தலை மோனை மாற்றம் இது.

பாகிஸ்தானுக்கு நவீன அமெரிக்க ஆயுதங்கள்; சீனருக்கு ஆயுதங்கள்; தென் கொரியாவும் அதன் சகாக்களும் நவீன போர் கெட்டுக்கள் அனுப்பிவைக்க வேண்டுமென்று ஒரு பாதி காப்பாக இலங்கை ஜனாதி பதியின் சீன விஜயம்!

இந்த குத்துக்கரண நாடகத்தில் பேச்சுவார்த்தையும் புன்னகையும் எதற்காகின் றன? குண்டலனுக் குச் சமர்ப்பணம்!

3000 பொலிசார் புதிதாக நியமனம்

(தொழுதுப்)

இலங்கையில் அதிகரித்து வரும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த 3000 பொலிசாரும், பல நீதிமன்றங்களும் நிய மிக்கப்படவுள்ளதாக நீதி மற்றும் தபால் தந்தி அமைச்சர் திரு. ஆ. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

எம்மவரும் இரணைமடுவும்

இலங்கையில் வடதலைப் பிரதேசத்தில் வாடாத வறுமையை வட்டிசையாய் வெளிப்படுத்தி ஆயிரவுக்கு அனுப்பிய வரலாறு களித்த வரலாறு வரலாறு ஆறே. உதயதிபதி வரலாறு என்றும் வகிய ராஜ்குமாரியிருந்தமையால் இப்பெயர்பெற்றது போலும். 1900ல் இவ்வாறான தடுத்த இரணமடுக்குளமாகிய பெருமைசேர். பொன் இராம நாதன் போன்ற பெரியோரைச் சாரும். இவரோக சுவாமிகளை சதாகிவம் இவ்வேயை வளங்கப் பொறுப்பாளராக நியமித்தார். குளம் பல மாற்றங்களை கண்டாலும் இன்று 54 அடி ஆழமான 6900 ஏக்கர் நீர்ப்பரப்பையும் 106, 500 ஏக்கர் உடைநாய் 20,000 ஏக்கர் விளைவான வயற் பிரதேசத்தை நீர்ப் பாய்ச்சுகின்றது. ஆரம்ப காலத்தில் அமரர் திரான் வெற்றிவேலு போன்ற நல் முதலோர்கள் மகேஸ்வர, வஞ் சக வாய்ச்சல் முதலான போன்ற நோய்களாலும், பாரிய குடியேற்றங்களாலும் தாக்கப்பட்டனர். அவர்களது சலிப்பில் விளைவே இத்திட்டத்தில் உயர்வு. அதி நியாயங்கள் ஆண்டாண்டுகளாக வண்டிருக்கோரை.

இத்திட்டம் நாட்டுக்கு வேண்டிய நெல்லை உற்பத்தி யாக்க உதவுகிறது. பரந்தனி லும், வடக்கில்லியிலும் உள்ள அரசாங்க நெற்பண்ணைகள் புதிய வர்க்கங்களை விருத்தி செய்வதன் முலம் விவசாயி களை ஊக்குவிக்கின்றன. வடக்கே, முரசுமோட்டை, உருத்திரபுரம், ஜயந்திநகர், கனேசபுரம், உமையாள்புரம் முதலாம் குடியேற்றத்திட்டங் களை இணைத்தே விளைநிலங் கள் இன்றுள்ளன. இத்தனை விவசாயி களுக்கு உறுதுணையாயிருப்பது இரணமடுக்குளமே. இது தொடர்பான நீர்வாகம் நீர்ப் பாசனப் பொறியியலாளர் பொறுப்பிலேயே இருந்தவரு கிறது இப்பொழுது இருப்ப வர் திரு. குமாரசுவாமி அவர் கள். காரியாலயத்தில் 'அப்பு' என அன்பாக அழைக்கப்படுகி றார். அவர் பெருமையைப் பற்றி கமக்காரர் எல்லோரும் ஒரேநிதமாகவே புழந்து கூறு கிறார்கள். கடமை, கண்ணி யம், கவிப்பாடு என்ற முக் குணங்களும் ஒருங்கேயமைந்த சிவர். சர்வதேச தொற்று நோயாகிய வஞ்சத்தால் பீடிக் கப்படாதவர். அவருக்கு அவரே நிகர். அவருடைய காலத்தில் தண்ணீர் குறை வின்றி நிறையான வேளா மை செய்துவந்தனர். இதனை அவரும் அவர் விருப்பப்படியே அமைத்து அனுபவித்தார். அவர் இரண்டு வயப் பிரியரென வஞ்சினோ அன்றி அவரது ஆற்றல் அறிந்தவரோ அவ் சமயமா ச் சிறிதும் அடைவிக்க முடியா வெறுவெள்ளையாகி யது. "பொங்கும் புனலா னென்றும் புரண்டது புனரிலே போல்" அங்கே கட்டை தான்றுமோ என்ற அச்சம்- அடித்தளர் கவிவு- எதிரு மனம்- ஊக்கு அவை அறி வின்பு அனைவர மனமும் அவை ந்ததே. அவரற்ற மனமும் உறுதி உற்றதே இரவு பக லாக அலைப்பு நித்திரையில் கணவுகூற உழைப்பு- கிரம தானம் கர்மவீரன் காப்பாற் றிய வி. காலத்திலும் காப்பா றிய விடிவு நாமெல்லோரும் பஞ்சமும் பட்டினியுற்றோம். மற்றவரிடம் சனமும் பாழ் தான். இறைவனுக்கே இவ் வளவு சோதனைகளை எங்கள் அன்பனே

இக்குளப் புனருத்தாரண வேலை உலக வங்கியின் உதவியுடன் நடைபெற உள்ள இப் பொன்னான தருணத்தில் நன் றியுடன் போன அறிவும், ஆற்ற லும் விசுவாசமும் உடைய ஒரு வரது தொண்டு அவசியம் வேண்டுமல்லவா? ஆதலின் தாங்கள் இதைப்பற்றும் தாங்கப் பிடிவோடுவீர்களா? இலங்கை வாழ்வில் அவரைப் பணிக்கு ஆலோசகராக அமர்வீர்களா? இவர்க்கு இளைப்பாறுதல் வழங்கிய விசுவாசத்தைக் கையிலிய அமைத்த பிருத் தானை நீர்ப்பாசனத்தை நிலம் நீத்த ஒரு நிலைத்தை தவிர்த் ஞாபக இன்னமாக ஆக்கி நாட்டுக்கு நலம் நருமல்லவா? பிருந்தாவன நீர்வாகியென்று இன்று.

திரு. குமாரசுவாமி அவர் களது தொண்டு எப்பொழு தும் நினைப்பில் இருக்கு மன்றோ! அரசின் நன்றொண்ட வேற்று அன்றைக் காலாசார் நிதி நிரப்புவோ நிட்டமிட் டுச் செய்வார். இத்தகைய ஒரு நிலைக் உன்னாப் பிர யாணிளின் கவிட்டத்தைக் வெறுமாறோ! அவர் இன்ப் பாதம் நாம் அணுகுகின்றது. ஒரு நிதிச் சபையை நிறுவி ஆசியிய நலன்போலோரும் முன்வோமாக. அப்பால் இது பற்றி நமது நமது கருத் துக்களை நினைதாளில் வெளி யிட வெளிப்படுத்துவார்க ளாக.

இனவிடுதலையின் பின்பே
தமிழ்பேசும் தொழிலாளரின் விடுதலைபற்றிசிந்திக்கமுடியும்
'ஆலாஸ்' மேதினச் செய்தி

(வாழ்ப்பாணம்)

"இலங்கை வாழ் தமிழ் பேசும் தொழிலாளர் இவ்வருடம் மேதினம் பெரிதும் சூழ் நிலையில் வழமைபோல் என்று மேதினத்தைகொண்டி தமிழ் தொழிற்சங்கத் கூட்டணித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்புச் செயலாளருமான திரு எம். அமிர்தலிங்கம் நேற்று வெளியிட்ட செய்தியில் தெரி வித்துள்ளார்.

அறிக்கையில் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்ப தாவது:- "தமிழ் பேசும் தொழிலாளர்களின் உரிமை கள் இனரீதியாகப் பறிக்கப் பட்ட பழைய வரலாறு நாடறிந்த உண்மை. தமிழ் தொழிலாளர்கள் எல்லாத் வகைத் தனிச்சிங்களச் சட்டம் காரணமாகப் பதவி உயர்வு மறுக்கப்பட்டது. இடமாற்றம் செய்ய பிரச்சினைகள் கடந்த சில நூற்றாண்டுகளாக தமிழ் தொழிலாளரின் உரிமை கள் முற்றுமுழுதாகப் புறக் கணிக்கப்பட்டுள்ளது.

"தமிழ் பேசும் தொழி லாளர்கள் இழந்த உரிமை களைப் பெறுவதற்கான முதற் கட்ட நடவடிக்கையாக இலங்கை முழுவதும் மேற் கொண்டபோதிலும் முழு மையான வெற்றியை [illegible] தமிழ் தொழிலாளர் களைச் சேர்ந்தவர்கள் சர்வதேச மாநாட்டை பொது வுடமைத் தத்துவத்தின் ஆதிப் பலமாகக் இலங்கும் அரசியற் கட்சியோ, அல்லது அக்கட்சி கொள் சார்ந்த தொழிற்சங்கங் களோ, தமிழ்பேசும் தொழி லாளர்களின் உரிமைகளை மீட் பதற்கு முன்வராதிருப்பது எந் நாடறிந்த உண்மை இந்நிலையில் தமிழ்பேசும் தொழிலாளர் இவ்வருடம் மேதினத்தைக் கொண்டாடு வது வெறும் பகிரங்கச் செய்திகளைச் சொல்லுவதை ஒரு நிகழ்ச்சி யாகவே அமையும்.

"பிறப்பால் இணைந்தும் பிரிவு தமிழ் பகுதிகளில் தமிழ் மக்கள் எவரும் நடமாடமுடி யாத பயங்கர சூழ்நிலை நில வும் இத்தேரத்தில் தொழி லாளர் தங்கள் உரிமைகளைக் கேட்கக்கூட சூழ்நிலையில் தொழில் நிறுவனங்களை வேண்டி செய்யும் சூழ்நிலையில் மேதினம் கொண்டாடுவது எவ்விதத்திலும் பொருத்த மானது அல்ல.

"தமிழ் பேசும் தொழிலா ளரின் பிரச்சினைகள் தமிழ் இனத்தின் விடுதலையோடு பின்னிப் பிணைந்த பிரச்சினையாகும். ஆகவே தமிழ்பேசும் தொழி லாளர்கள் இப்புனிதமான மே தினத்தில் இனவிடுதலை என்ற உன்னதமான இலட்சி யத்தை அடைவதற்கு தமது முழுமையான ஆதரவை நல்கி தமிழ் தொழிலாளர் வகையில் செலவிட இருக்கிறார் கள்.

"தமிழினத்தின் உரிமைகளை முற்று முழுதாக மறுக்கும் இலங்கை அரசின் சார்புடைய தொழிற் சங்கங்களில் பங்கு பற்றுவதன் மூலம் தொழிலாளர் கள் தங்களுக்கு ஏதாவது சில சலுகைகளைப் பெறுவதற்கு அரசு சார்பு தொழிற்சங்கங்களில் பங்குபற்றுவதை ஒரு சிலர் இருக்கலாம். ஆனால் தமிழ் பேசும் தொழிலாளருக்கு விமோசனம் கிடைக்கும் என்பது ஒரு தற்காலிக தீர்வாகவே இருக்கும் என்பதை விஷயமாகும்.

"வாழ்க தமிழ் கடந்த பொ காலம் இடம் பெற்ற நிகழ்ச்சி களை பொறுத்தவரை தமிழ் மக்கள் என்றுமே பாதகப் பதற்ற நிலையில் உள்ளன. இந்நிலையில் மேதினம் கொண்டாட புறப்படுவது இனத்தின் பாதுகாப்புக்கு முரணானதாகும். ஆகவே இத் தருணம் மேதினம் கொண்டாடுவது தமிழ்பேசும் தொழி லாளரைப் பொறுத்தவரை சரித்திரபூர்வமான இனிடு நிலையில் விடுதலைபற்றி இந் நிய முடியும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தியூணைக்கும்படை அமைப்பது தமிழ் மக்களுக்கு ஒரு சவால்!'

ஆலோசனைக் கூட்டத்தில் ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மக்கள் தங்களுக்கு விடுக்கப்பட்ட சவாலாக இதனை ஏற்று, யாழ்ப்பாணத்தில் தியூணைக்கும் படையை அமைக்க வேண்டும்" என்று யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு இ. கி. சே. சிவஞானம், வர்த்தகர்கள், தொழிலதிபர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ் மாநகரசபை கமிட்டி அறையில் நடந்த இக் கூட்டத்தில் ஆணையாளர் திரு. சி. வி. சே. சிவஞானம் மேலும் கூறியதாவது:

"தியூணைக்கும் படை அமைக்கும் நிலைப்பாடு வந்தபோது தியூணைக்கும் படையினரும், கடற்படையினரும் எரிக்கும்போது தியூணைமுடியுமா என்ற கேள்வியை சிலர் ஒழுப்பியுள்ளனர்.

எரிக்கப்படும்போது, தியூணைக்கும்படை செலவுபட்டாவது எரியுமே, எரியும்போது தியூணைக்கலாமே. யாழ் ஐக்கியவர பாரம்சுமம் எரிக்கப்பட்டபோது அதிகு போகமுடியாதிருந்தது அதற்கு பின்னர் எரியும்போது அதிகு போக முடிந்தது. தியூணைக்குப்படை இருந்திருந்தால். ஐக்கிய வியாபாரசங்கத்தை 75 வீதம் காப்பாற்றியிருக்கலாம்.

தியூணைக்கும் படைக்கும் அப்புலைஸ் போன்று வீதிகளில் முன்னுரிமை உண்டு. தியூணைக்கும்படை இருந்திருந்திருந்தால் யாழ் பொதுசன நூலகத்தில் பெருமளவிலான காப்பாற்றியிருக்கமுடியும். கேள்வாலையாவது காப்பாற்றியிருக்கலாம்.

"தொழுபிக் கள்ள தியூணைக்கும்படைநீ நீர் தொழுப்பு விலாபம் வரை செல்கிறது. ஆனால் இத் தியூணைக்கும்படை, கள்ளர்கள் போன்ற இடங்களுக்கு சேவை செய்யலாம்.

யாழ்ப்பாணம், தமிழரின் தலைநகரம். இங்குதான் வர்த்தகநிலையங்களும் தொழிற் சாலைகளும் அதிகம் உண்டு. பிற இடத்தை சேர்ந்தவர்கள் நினைத்தால் இங்கு வந்துபோகிறார்கள். ஏதோ ஒருவிதத்தில் ஆயிரக்கணக்கான இச்சபைக்கு வரி செலுத்துவதில் பங்கு ஏற்கிறார்கள். ஆனால், இத் தியூணைக்கும்படை யாழ் மாவட்டம் முழுவதற்கும் சேவை வழங்கவேண்டும். தொழுப்பு தியூணைக்குப்படையின் ஆலோசனையிலேயிருந்தால் இத் தியூணைப்புப்படை அமைக்கப்படுகிறது.

தியூணைக்கும் படைக்குரைய பராமரிப்பு செலவை ஏற்க முடியாத நிலையில் இருக்கிறது. தியூணைக்கும் படை உள்ள பகுதிகளில், காப்பு ஒதி செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு 20 சதவீதம் குறைவு கொடுக்கிறார்கள். இந்த 20 சதவீதத்தைக் கொண்டு பராமரிப்பு செலவை சமாளிக்கலாம்.

டாக்டர் பிலிப் பேசுகையில் ஹர்தாலுக்கு அதிக நேரத்தில், தியூணைக்கும்படை சேவை பாதுகாப்பில் தாமதம் ஏற்பட்டமைபற்றும் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு இதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் கூறினார். வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களுடன் தொடர்பு கொண்டு இதற்கிடமிருந்தான நிதி உதவியை பெறமுயற்சி எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

யாழ் ரோட்டரி கழக தலைவர் திரு. சதாசிவமூர்த்தி பேசுகையில் கூறியதாவது "யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை தியூணைக்கும்படை கட்டாயம் தேவை. 'எதிரி தாக்கும் போது நாம் பேசாமல் இருக்க கூடாது. பதிலடி கொடுத்தால் தான் எதிரிக்கு பயம் ஏற்படும். ஆனால் நாம் தியூணைக்கும் படையை அமைக்க வேண்டும். யாழ். ரோட்டரி கழகம் இதற்கு ஆதரவு வழங்கும்.

இலங்கை தமிழ் நிருபர் அமைப்பாளர் பொல் எதிராசா பேசுகையில் இலங்கை அரசாங்கம் அதிகளவு தியூணைக்கும் படையில் சேவை தமிழருக்கு தேவை. அரசியல் குழ்நிலைகள் ஏற்படும்போது மாத்திரம் உற்று நோக்கும் தியூணைக்கும் படையின் அவசியம் தெரிந்து விடும் என்றார்.

மிக்கமான அதிபர் திரு. க. கனகரட்ன கேலையில் கூறியதாவது:- தியூணைக்கும்படைக்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். இதனை அலைக்கவேண்டும் என்று நாம் அரசாங்கத்தை கேட்கவேண்டும். அரசாங்கம் மறுத்தால் பிறநாடுகளிருந்து பெறமுயற்சிக்கவேண்டும்.

யாழ். மக்கள் மேலும் கஷ்டப்படுத்தாமல் விரைவில் அரசியல் தீர்வு காண முயற்சிக்கவேண்டும்.

தியூணைக்கும் படை செல்வதற்கு யாழ். நகரிலுள்ள சகல ஒழுங்கைகளும் அகலமாக்கவேண்டும். மரங்கள் தேவையான இடங்களில் தேவையான தூரங்களில் ஆணையாளர் நடவடிக்கை எடுத்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்க வேண்டும்.

முன்னாள் யாழ் மாநகரசபை உறுப்பினர் திரு எஸ். நித்தியானந்தராசா கூறியதாவது:- எல்லோரும் ஒன்றாக சாகப்போகிறோம் என்ற எண்ணத்தோடு மனிதன் வாழமுடியாது. இருக்கமுடியாது. எதிர்த்துவிடுவார்கள் என்பதற்காக தியூணைக்குப்படையை அமைக்காமல் இருக்கமுடியாது. இத் தியூணைக்குப் படை அமைப்பதை தமிழ்மக்களின் போராட்டத்தில் ஒரு அங்கமாகும்.

யாழ். வர்த்தக சங்கத் தலைவர் திரு. ரி. சதாசிவம்பிள்ளை கூறியதாவது:-

"முக்கியமான வர்த்தக நிலையங்கள்தான் எரிக்கப்பட்டன. ஆனால் இன்று விலை மதிக்கமுடியாத உயிர் பறிக்கப்படுகிறது. உயிரை இழக்கும்போது இந்த வர்த்தக நிலையத்தினால் இந்தன ஏற்படாது. உயிரைக் காப்பதில் தான் மக்கள் இன்று அக்கறை எடுத்திருக்கிறார்கள். தியூணைக்கும் படையமைக்க வர்த்தகர்கள் உதவிசெய்வோம். ஆனால் முன்புபோல் வாரி வழங்க முடியாத நிலையில் இருக்கிறோம்."

முன்னாள் உறுப்பினர் ஜனாப் கே. எஸ். எம். கமில் பேசுகையில், வர்த்தகர்களிடம் மட்டும் அல்லாமல், பொது நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு வெளிநாடுகளில் செல்ல நிதி சேர்க்கவேண்டுமென்று கூறினார். முன்னாள் சபை உறுப்பினர்களின் ஆதரவுடன் அந்தந்தப்பகுதியில் உள்ள வர்த்தகர்களுடன் சென்று நிதி சேர்க்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார். (உ)

யாருடையது?

புத்தூரைச் சேர்ந்த திரு. கே. குமரன் என்பவர் திரு. ஆறுமுகம் மயில்வாகனத்தின் பராமரிப்பிலிருந்த தனது நிலத்தில் வீடு கட்டுவதற்காக அத்திவாரம் வெட்டியபோது, அங்கு ஒரு பெரிய பானை புதைக்கப்பட்டிருந்ததைக் கண்டெடுத்தார். அதனுள் தங்க நகைகள் இருந்ததாகவும் அவற்றை அவர் தனது வீட்டில் வைத்திருப்பதாகவும் அறியப்படுகிறது. இந்த நகைகள் தனக்கே சொந்தமானவை என்று திரு. மயில்வாகனம் உரிமை கோரியுள்ளார். இந்த நகைகள் யாருடையது என்பது பற்றி இன்னும் முடிவு எட்டப்படவில்லை.

கதிரவேல்சாமியார்

மாணிக்கம் கதிரவேலுசாமியார் ஒழுக்கத்தால் விழுப்பம் எய்திய ஒரு பெரியவர்.

கிறுவயதிலேயே சுற்றாடலில் நிலைத்திருந்த கிறுமைகள் எல்லாவற்றிலுமிருந்த தீங்கினை சொல்லாலை, கல்லாமை தாழ்மை, பொய்புரையாமை போன்ற சிறிய ஒழுக்கங்களில் வழுவாது வாழ்ந்தவர். குருகுலத்தில் நிருவருளும் நிறைவும் பெற்றவர். சன்னாசிக்க வாழ்வினிலே அன்புக்குப் பாத்திரமாகி கண்ணைச் சிமிட்டும் நினைவிலேயே. பற்றற்ற சிவபோகியாகிய இவர் அவரவர் ஊரவரும் கூடிய பேரன்பையும் பெருமதிப்பையும்பெற்றார். மனம் எதிர்பாராமல் தனது கடமையை முடித்தார். சொல் தவறாமல் செயல்பட்டார். அனைவரையும் சமமாகவே சமபார்வை என்ற பயன்படுத்தியுடன் அழைத்தார்கள்.

சிவபோகம் எய்தும்வரையில் வாழ்ந்த இவரைப்பற்றிய மகத்தான இவ்வளவு குறிப்புகளையும் இவ்வினாவில் ஆத்மசாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

—கி. சிவநாதசுந்தரம்

இந்தியத் தூதரக சட்ட ஆலோசகராக 'பாலா'

(யாழ்ப்பாணம்)

இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தின் சட்ட ஆலோசகராக சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், இந்திய உயர் ஸ்தானிகரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே முதலாம் நிலை முதல் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், யாழ். மேல் நீதிமன்றத்தில், கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்குகளில் ஏற்கனவே ஆஜராகியுள்ளார். இவ்வழக்குகளில், நான்கு மீனவர்கள் விடுதலை பெற்றுள்ளனர். மற்றும் 5 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்குகள் விசாரணையில் இருந்து வருகிறது.

இந்திய உயர் ஸ்தானிகரின் ஆலோசகர் பொறுப்பை இவர் இவ்வழக்குகளில் கையாளவிருந்தார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஆரம்ப செயலாளராக திரு. ஆர். பாலசுப்பிரமணியம், செயலாளராக பணியாற்றியபோதே 'இலங்கை மத்தும் சட்டத்தின் கீழ் எதிரான கோடீஸ்வரன் வழக்கு நடைபெற்றது. அதில் வெற்றியும் கிடைத்தது.

தேசிய அரசாங்க ஆதிக்க காலத்தில் போது உள்ளூராட்சி அமைச்சராகப் பணியாற்றிய திரு எம். திருச்செல்வத்தின் செயலாளராகவும் அவர் பணியாற்றினார். யாழ். ரோட்டறிழகத்தின் தலைவராகவும் முன்பு பணியாற்றிய சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம், தற்போது யாழ். பிரஜைகள் குழு செயலாளராக பணியாற்றுகிறார். (உ)

தையல் பயிற்சி நிலையம்

(சித்தன்கேணி)

தொழிற் நிலைகளைத்திலும் நடாத்தப்படும் தையற்பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் முகாமில், சோறன்பற்று பிரதேசசபைப் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிலைய ஆரம்ப விழாவிற்கு தொழில் உதவி ஆணையாளர் திரு. சூ. தர்மலிங்கம் தலைமைதாங்கினார். பின் உதவி அரசாங்க அதிபர் திரு. சு. முருகேசு மகளை விளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார். மயிலி நிலைய யாழ் உதவித்தொழில் ஆணையாளர் திரு. எஸ். கி. இராசதுரை நிறுத்துவைத்தார். இப்பயிற்சி நிலையத்தில் சுமார் இருபது யுவதிகள் பயிற்சிபெறுகின்றனர்.

யாழ். இந்துவின் சாதனை

(யாழ்ப்பாணம்)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. [சாதாரணம்] பரீட்சையில் யாழ் இந்துக்கல்லூரியில் இருந்து தோற்ற மாணவர்கள் எடுப்பாட்டுகளிலும் அதி விசேட சித்தி பெற்றுள்ளனர்.

ஏழுமாணவர்கள் 7 பாடங்களில் அதிவிசேடசித்தியும், 8 மாணவர்கள் ஆறு பாடங்களில் அதிவிசேடசித்தியும், 14 மாணவர்கள் 5 பாடங்களில் அதிவிசேடசித்தியும் பெற்றுள்ளார்கள். 184 மாணவர்கள் க. பொ. த (உயர்தர) வகுப்பில் கல்விபெறத் தகுதிபெற்றுள்ளார்கள். (வெ)

கோழிப் பண்ணையாளர்களுக்கு

ஓர் நற்செய்தி

இதோ....!

வெள்ளை நிற முட்டையிடும் கோழிகளுக்கு
நிகரான பிறவுண் நிற முட்டையிடும்

கோழிகள்!

"ஹைசெக்ஸ் பிறவுண்"
(HISEX BROWN)

★ தரிபோது தேவையான அளவில் விநியோகம்.
★ வடக்கில் சிறந்தமுறை நிலையத் தாங்குபவை.
★ மிகக்குறைந்த இறப்பு விகிதம்.
★ குறைந்த உணவில் கூடிய முட்டைகள்.
★ முட்டைகளை அளவில் பெரியவை.
★ முட்டையிடும் காலம் கடந்த பின்னர் கடுமையான இறைச்சி நிறை.

ஒவ்வொரு நிலைகளிலும் விநியோகம்

குஞ்சு ஒன்றின் விலை ரூபா	7 - 50
பாதுகாப்பு ஊசி + பெயிடு கலி	65
	8 - 15

உங்கள் தேவைகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.

பைரஹா பாம்ஸ்

கடிதமுகவரி: தொலைபேசி: 031 - 2508

உரிமையாளர்கள்:
M. I. M. NALEEM HAJIAR AND CO LTD.

உங்கள் பண்ணைக்கே தேடி சென்று வந்து விநியோகிப்பதற்கு எமது வடபகுதி விநியோகத்தருடன் தொடர்பு கொள்ளவும்.

தவிர்க்க முடியாத காரணங்களால் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த

புளொக் தயாரிப்பு வேலைகள்

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

"சித்ராலயா" ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ந. சற்குணராசா &
பிறதர்ஸ்

ஸ்ரேசன் ரோட், பிரம்படி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் விரைவில் முற்றுக ஒழிக்கப்படும்

அமைச்சர் மத்தியூ'

(தொடர்ச்சி)

"இலங்கையிலிருந்து பயங்கரவாதம் மிகவிரைவில் முற்றுக ஒழிக்கப்படும் என்று வேதனையுடன் கிழ்ஞாயிறு அலுவல்கள் அமைச்சர் மத்தியூ தெரிவித்துள்ளார்.

அலுவல் மாளிகையில் பத்திரிகை நடவடிக்கை ஒன்றில் இணைந்து கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில்:- நாட்டின் இறையாண்மை பாதுகாப்பு மீதும் சமூக மக்களுக்கும் பயங்கரவாதம் அச்சுறுத்தலாக இருந்து வருகிறது. 1978-ம் ஆண்டு தொடங்கிய இந்த இயக்கத்தில் தற்போது பெருமளவிற்கு ஏற்றம் பெற்றுள்ளது இதனால் எனது அமைச்சுத்தில் நிர்வாகம் பாதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் பயங்கரவாதத்தை முற்றுக ஒழித்தல் மட்டுமே நோக்கமாகும் என்று அவர் தெரிவித்தார்.

கணக்கியல் பரீட்சைப் பெறுபேறுகள்

(கோண்டாவில்)

தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடாத்தப்பட்ட உயர் தேசிய கணக்கியல், வர்த்தகவியல் மாணவர் சபைக்கான இறுதியாண்டுப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணப் பல்தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து தோற்றியவர்களில் எவருமே இத்தேர்வுகளில் கடந்த வருடமும் இவ்விரு பரீட்சைகளிலும் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் எவரும் இத்தேர்வுகளில் சித்தியடைய வில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இப்பரீட்சையில் நிர்வாகம் பிரிவில் தோற்றிய மாணவர்களுக்கு இப்பெறுபேறுகளில் தாக்கு நிர்வாகம், அலுவலக நிர்வாகம், பொதுசனத் தொடர்பு ஆகியனவற்றிற்கான விரும்பத்தக்கன அனுப்பப்படவில்லை. இதற்கு முன் முறை தோற்றிய மாணவர்களுக்கு மேற்கூறிய பாடங்களுக்கான பெறுபேறுகள் இன்னும் வெளியாகாதிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் 1981-ம் ஆண்டுப் பரீட்சை நெறி முடித்தபோதிலும் இன்னும் வரைக்கும் மாணவர்கள் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

ரூபவாஹினியில் இன்று

மாலை

5-30 நாடகமலர்

5-35 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)

6-00 விளையாட்டுப் பயிற்சி

6-30 சிங்கள நிகழ்ச்சி

6-55 செய்திகள் (தமிழ்)

7-15 கலைரங்கு

7 45 "பப்ளிக் ஸ்பீச்" (சிங்களம்)

8-15 செய்திகள் (சிங்களம்)

8-35 "பப்ளிக் ஸ்பீச்" தொடர்ச்சி

9 05 எதிர்கால நிகழ்ச்சிகள்

9-30 செய்திகள் (ஆங்கிலம்)

9-55 சாளிஸ் ஏஞ்சல்ஸ் (ஆங்கிலம்)

10-30 உலகச் செய்திகளைப் புகை

10-35 சாளிஸ் ஏஞ்சல்ஸ் (தொடர்ச்சி)

10 55 நிகழ்ச்சிகள் முடிவு.

யாழ். வங்கிக் கிளைகளில் ஒரு மணி நேர வேலை!

வாடிக்கையாளர்கள் பாதிப்பு!!

'யாழ்ப்பாணம்'

யாழ். மாவட்டத்திலுள்ள வங்கிகளில் ஒருமணித்தியாலத்தை குறைத்து வாடிக்கையாளர்களுடனான அலுவல்களுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள நேரம், வாடிக்கையாளர் தங்கள் அலுவல்களை நிறைவேற்ற முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டிய ஏற்பட்டுள்ளன.

தூர இடங்களில் இருந்து வங்கிகளுக்குச்செல்லும் வாடிக்கையாளர்கள், காலதாமதம் நிகழ்வதிட்டு, குறிப்பிட்ட நேரம் முடிந்ததும், வங்கி உத்தியோகத்தர்கள் தங்கள் அலுவல்களையும் முடித்து விடுகின்றனர் என்று விசனம் தெரிவித்தனர்.

பொலிசாரும்-வங்கிகளும் பாதுகாப்பு ஊழியர்களும் கடமையில் பாதுகாப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளபோதிலும், வங்கிகளில் வாடிக்கையாளர்கள் தங்களுடைய நீண்டநேரம் முன்னோக்க நீடிக்கக்கூடாது என்று வாடிக்கையாளர்கள் கோரியுள்ளனர். (மா)



ஆயிரக் கணக்கானவர்களுக்கு காச நோய் இருப்பது கண்டுபிடிக்கப்படவில்லை!

(தொழுப்பு

ஆயிரக்கணக்கான காச நோயாளர்கள் அந்நோய் தமக்கிருப்பது கண்டுபிடிக்கப்படாத நிலையில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ஆய்வொன்றின் முடிவுகளில் ஆயிரக் காச நோயாளர்கள் கண்டுபிடிக்கப் படவில்லை. மேலும் ஆயிரம் பேர் அந்நோய் கண்டுபிடிக்கப் படாதநிலையில் உள்ளனர்.

1982ம் ஆண்டு சுமார் மூன்றாயிரம்பேர் இந்நோயினால் பீடிக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இதேவேளை இதுவரை சுமார் அறுபதினாயிரம் பேர்வரை இந்நோயினால் பாதிப்படைந்திருக்கின்றனர் என்று கூறப்பட்டது.

இதேவேளை கடந்த வருடம் 5 30 000 பி. வி. ஜி. தடுப்பு ஊசி இளைஞர்களுக்கு கடந்த ஆண்டிலேயே போடப்பட்டன. இத்தடுப்பு 1000 வருத்தல உதவி யோகத்தர்கள் காசநோய்த் தடுப்பு வேலைகளுக்கென பயிற்றப்பட்டிருந்தனர் என்று கூறப் பட்டது. (கி

இன்றைய பலன்

மாதம் — சித்திரை
திதி—18 (30-4-1984)
வாரம் — திங்கள்
நிதி — சதுர்த்தசி காலை 8-43க்கு மேல் அமாவாசை
நட்சத்திரம் — அச்சுவினி பின் இரவு 1-58 வரையும்.

மேடம்: மனச்சோர்வுடன் கடிதங்கள் எதிர்பார்த்திருந்தவை ஏமாற்றம் விளையும். அலுவலகத்தில் கூடுதல் நலம் பாதிக்கப்படலாம். அரசாங்க வகையில் அனுகூலம் கிட்டும்.

இடபம்: ஒளிமயமான சூழ்நிலை உருவாகும். விரும்புகின்ற வர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாக கிடைக்கும். இரு மனம் கலந்தவர்கள் மத்தியில் இனிமையான சம்பவம் இடம் பெறும்.

மிதுனம்: பொருமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவிசெய்பவரைப் பகைத்து வைத்தல் தேவையில்லை. அரச பதவிநிலைகளில் இடமாற்றம் ஏற்படலாம். வழக்கு விவகாரங்களில் சமரசமாகுதல் வேண்டும்.

கடகம்: உறவுகளை வலுப்படுத்தும் முயற்சியில் உங்களை தவிர்க்க முடியாத வழிபிறக்கும் உபயோகமான தினம்.

சிங்கம்: நல்ல காரியங்களை ஆரம்பிப்பதற்கு இன்று போலவே நாள் தொழில்புரியும் இடத்தில் பாராட்டுதல்களை கொடுக்கும்.

கன்னி: பணவரவுகள் பற்றி குறை பாடுகளில் தடைகளுண்டு நம்பிக்கை வேண்டி முயன்று பணமுடை நிறைவேறும் முன்னெச்சரிக்கை நன்று.

துலாம்: இலாபத்தில் இனிமையுமும் வெளியிடத் தொடர்புகள் பெருகும் இனசனங்களில் உதவியுடன் செல்வாக்கு உயரும்.

விருச்சிகம்: முன்னேற்றத் திற்கு முட்டுக்கட்டை தோன்றும் கொடுத்தவாக்கை காப்பாற்ற முடியாமல் நிலைகுலைவீர்கள் இரு சாராரையும் அரவணைத்துச் செல்லவும்.

தனுசு: நீண்டநாள் பிரச்சினையில் இன்று சமரசமுடிவு காணப்படும் மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக் கொள்வீர்கள் குடும்பத்தில் சிலருக்கு கூர்மை பிறக்கக் கடும்.

மகரம்: தொழில் துறையில் புதிய வேற்றங்கள் மேலதிகாரிகளின் பாராட்டுதல்களுக்கு இலக்காவீர்கள் இனிய வாழ்க்கையில் கூடிக் கடந்த பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்: பொருளாதாரநிலை சீடையும் இனிய வாழ்க்கையில் எதிர்பாராத வரவுகளுக்கும் இடமுண்டு மத்திமவயதினரின் வேதனை உயர்த்தப்படலாம் வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும்.

மீனம்: கதிர்காமத்தை இறைவனை தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கும். இன்பமான சுற்றுலாவும் பணம் திரும்பவரலாம் கடுமையான முயற்சிகளை தவிர்க்கவேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

அமெரிக்கா பயணம்

(பண்டிதரிப்பு)

யாழ் பிரதேச இளைஞர் தடுப்பு இயக்க [illegible] நிர்வாக உத்தியோகத்தர் டாக்டர் கே. எஸ். இவருடு அமெரிக்காவில் மூன்று வாரகாலம் விசேடபயிற்சியைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அங்கு மையில் அண்மையில் சென்றார்.

அமெரிக்காவிலுள்ள மக்கள்தொகை ஒன்று மனநல புலமைப்பரிசிலைப் பெற்றே டாக்டர் இவருடு அங்கு சென்றுள்ளார்.

இளைஞர் நோய் தடுப்பு பற்றிய விசேட பயிற்சிகளையும் வாரகாலம் இவர் அங்கு பெற்று நாடு திரும்பவுள்ளார். (வெ)

சேவைநலம் பாராட்டுவிழா

(பண்டிதரிப்பு)

பண்ணைக் இளைஞர் விளையாட்டுக் கழகம் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபராகக் கடமை யாற்றி இடமாற்றத்தில் சென்றுள்ள திரு. கு. செந்தில் வடிவேலின் சேவைக்கும் பாராட்டி சேவைநலம் பாராட்டுவிழா கொக்குவில் கலாசார மண்டபத்தில் நடாத்தியது.

பண்ணைக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ச. நடேசுவரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு அதிதியாக கிராமசேவை அலுவலர் திரு. எஸ். கனகரத்தம், விசேட சேவை உத்தியோகத்தர் திரு. கு. பஞ்சாயுதன் ஆகியோர் உரையாற்றினர். மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினார்கள். (வெ)

கட்டிடம் திருத்தப்படும்

(பச்சிலைப்பள்ளி)

பளையிலுள்ள இலவச கண்ணுடை நெசவுத்தொழிற்சாலைக் கட்டிடம் திருத்தியமைக்கப்படவுள்ளது.

இதற்கு பல்நோக்கு பயிற்றப் பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஐயாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடும்பசுகாதார கருத்தரங்கு

(நித்தகவேணி)

குடும்பசுகாதார நிலையத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு மே மாதம் முதலாந்திகதி களியாவிளை சமூக நல நிலையத்தில் செல்வன்ன நடைபெறவுள்ளது. இச் செய்தி வடமேலிக் சேவைக்கோட்ட பராமரிப்பு சேவைநலம் பாராட்டுவிழா கொக்குவில் கலாசார மண்டபத்தில் நடாத்தியது.

பண்ணைக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ச. நடேசுவரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு அதிதியாக கிராமசேவை அலுவலர் திரு. எஸ். கனகரத்தம், விசேட சேவை உத்தியோகத்தர் திரு. கு. பஞ்சாயுதன் ஆகியோர் உரையாற்றினர். மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினார்கள். (வெ)

கட்டிடம் திருத்தப்படும்

(பச்சிலைப்பள்ளி)

பளையிலுள்ள இலவச கண்ணுடை நெசவுத்தொழிற்சாலைக் கட்டிடம் திருத்தியமைக்கப்படவுள்ளது.

இதற்கு பல்நோக்கு பயிற்றப் பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஐயாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குடும்பசுகாதார கருத்தரங்கு

(நித்தகவேணி)

குடும்பசுகாதார நிலையத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு மே மாதம் முதலாந்திகதி களியாவிளை சமூக நல நிலையத்தில் செல்வன்ன நடைபெறவுள்ளது. இச் செய்தி வடமேலிக் சேவைக்கோட்ட பராமரிப்பு சேவைநலம் பாராட்டுவிழா கொக்குவில் கலாசார மண்டபத்தில் நடாத்தியது.

பண்ணைக் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. ச. நடேசுவரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிறப்பு அதிதியாக கிராமசேவை அலுவலர் திரு. எஸ். கனகரத்தம், விசேட சேவை உத்தியோகத்தர் திரு. கு. பஞ்சாயுதன் ஆகியோர் உரையாற்றினர். மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினார்கள். (வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீகல் (யாழ். நகர்)
Daily 10-30 a.m.
2-00 p. m
THE AMSTERDAM KILL
(Color)
(முழுநீள சண்டைப் படம்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
மறு அறிவித்தல் வரை
10-30, 2-00 மணி மட்டும்
சிவாஜி — பாரதி
தங்கச் சுரங்கம்
(புதியபிரதி)

வெல்லி மானிப்பாய்
மறு அறிவித்தல் வரை
2-30 காட்சி மட்டும்
கமலஹாசன்-இலக்குமி நடித்த
சகலகலாவல்லவன்

தற்கொலைகள் அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், இளைஞர் யுவதிகளே தற்கொலைச் சம்பவங்களில் பெரும்பாலும் சம்பந்தப்படுவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வெளிநாட்டு வேலைவாய்ப்பில் ஏமாற்றம், குற்றேபம், வீண் சந்தேகம், வாழ்க்கையில் விரக்தி போன்றவையே தற்கொலைச் சம்பவங்களுக்கு முக்கிய காரணங்களாகவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிருமிநாசினி வகைகளே தற்கொலைச் சம்பவங்களுக்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (சு)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
RIVALS
(எதிரிகள்)
(Thriller)

வருடமொன்றுக்கு உங்கள் பணத்துக்கு
26% தொடக்கம் 30% வரை
வட்டி பெற்றுக்கொள்ளுங்கள்
குறைந்த தொகை ரூபாய் ஆயிரம் (ரூபா 1000/-)
எந்நேரமும் அறிவித்தலின் பின்
முழுப் பணத்தையும் திருப்பிப் பெறலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீன சந்தை, (மேல் மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698

லேத் இயக்குநர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள
லேத் இயக்குநர் (Latheman) தேவை.
நேரில் வரவும்.
தகுதிக்கேற்ற நல்ல சம்பளம் கொடுக்கப்படும்.
உடனே தொடர்பு கொள்ளவும்.
சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்,
நீர்வேலி. (2039)

ராணி (யாழ். நகர்)
சக்கரவர்த்தி
திருமகள்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
சிவாஜி- சரோஜாதேவி
ஆலயமணி
(புதிய பிரதி)

நவீன முறையில் தயாரிக்கப்பெற்ற
பனை வெல்லம்
சகாய விலையில் விற்பனைக்குண்டு.
விபரங்கட்கு:
சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்,
பனை அபிவிருத்திச் சபை,
188 1/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 22094 (2059)

APPLICATIONS ACCEPTED
ONLY AT INTER TRADE AGENCIES
C/o VISVAm's PHARMACY
SANDILIPAY.
நேரில்
கீழ்க்காணும் விலாசத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.
விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
(2082)

மனோகரா (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, மட்டும்
Steve Mc Queen in
The Hunter

லிடோ (யாழ். நகர்)
ரவீந்தர் - ரூபா
ஒரு தலை ராகம்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-15
ஆசை அறுபது நாள்
(புதிய வண்ணப்பிரதி)

பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்

மாணவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்முறை செய்முறை உட்பட எமது அடுத்த வகுப்புகளுக்கும் பயிற்சிகளுக்கும் சேரும் விண்ணப்பங்களின் கடைசித் திகதி வெள்ளிக்கிழமை 04-05-1984 மாலை 4-00 மணிவரையும் பிற்போடப்பட்டுள்ளது.

★ மெக்கானிக்கல் எஞ்ஜினியரிங் டிப்ளோமா [Diploma in Mechanical Engineering]	6 மாத கால பயிற்சி
★ எலக்ரிக்கல் எஞ்ஜினியரிங் வேக்ஸ் டிப்ளோமா [Electrical Engineering Works [Diploma]	
★ மோட்டார் மெக்கானிசம் [Motor Mechanism]	
★ கொம்பியூட்டர் புரோகிராமிங் [Computer Programming]	
★ படம் வரைதல் [Draftsmanship]	
★ கடைச்சல் யந்திரம் இயக்குனர் [Lathe Operator]	4 மாத கால பயிற்சி
★ வெல்டிங் — மின் Welding — Arc	3 மாத கால பயிற்சி
★ மின் இணைப்பு [Electrical Wiring	1 மாத கால பயிற்சி
★ நீர் குழாய் இணைப்பு [Plumbing]	
★ ஆங்கில வகுப்பு [Spoken English]	

இவ் நிறுவனத்திலும் விற்கப்படும் படிவத்தில் மட்டுமே விண்ணப்பிக்கவும். எல்லா வகுப்பிற்கும் முதல் விண்ணப்பிக்கும் 15 பேருக்கு மட்டுமே இடம். ஆகவே உடனே விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தவிர்க்கவும்.

பதிவாளர்
பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்
59, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

வின்ஸர் (யாழ். நகர்)
இன்று முதல்
இரு தினங்கள் மட்டும்
தினசரி 3 காட்சிகள்
தமிழ்நாடு முதலமைச்சர்
எம். ஜி. ஆர் - லதா நடித்த
நீதிக்குத்
தலைவணங்கு
(புதிய பிரதி)
மேதினத்தை முன்னிட்டு
வழமைபோல் ஒரேமுறைத்த
சலுகைக் கட்டணத்துடன்
எல்லாக் காட்சிகளையும்
கண்டு பார்த்து ரசிக்கலாம்

கடைசித்தினம் 30-4-84
ராஜா (யாழ். நகர்)
Daily 10-30, 2-15, 4-30
Christopher Walken in
HEAVEN'S GATE
(Action-Adults-Color)
Sex-Scope
சுதந்திர நாட்டிற்காகப் போராடும் பிரான்சு மக்களுக்கும்-அமெரிக்க இராணுவத்திற்கும் ஏற்படும் [illegible] காட்சிகளைக் காணத் தவறாதீர்கள்!
குறிப்பிட்ட சில தினம் காண்பிக்கப்படும்?

குவைவயிற் தேவை

முஸ்லிம்ஸ் / முஸ்லிம் அல்லாதவர்கள்
வீட்டுப் பணிப்பெண்கள்
வயது 18 தொடக்கம் 35 வரை
விரைவில் பயணம்
எமது சேவை இலவசம்
INTER TRADE AGENCIES,
23, Aloc AVenue, Colombo-3
விண்ணப்பப்படிவம்
நேரில் கொடுக்கவேண்டிய முகவரி:
MR. P. V. SRIVAIKUNTHAN,
VISVAM'S PHARMACY, SANDILIPAY.
LABOUR LICENCE No. 199
APPROVAL No. FE/6/FEA/181/4537 (2083)

குவைவயிற் தேவை

பெண்கள் மட்டும்: ஆஸ்பத்திரி/விமான நிலையம் கிளீனேர்ஸ்
வயது: 20 --- 35 வரை
கலியாணம் கட்டாதவர்கள் மிகவும் விரும்பப்படுவர்.
ஆங்கில அறிவு இருந்தால் நன்று.
கொண்டுவரவேண்டியவை:
பாஸ்போட்டுடன் 2 பிரதி 5 படம், அனுபவச்சான்றிதழ்
எமது சேவை இலவசம்
INTER TRADE AGENCIES
23, Aloc Avenue, Colombo-3.
விண்ணப்பப்படிவம்
நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கவும்.
MR. P. V. SRIVAIKUNTHAN,
VISVAM'S PHARMACY, SANDILIPAY.
LABOUR LICENCE No. 199
APPROVAL No. FE/6/FEA/181/4538 (2084)

தொழிற் பயிற்சிகள்

★ COMPUTER PROGRAMMING BASIC COBOL
40 மணித்தியாலம் செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்
★ ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பயறிங்
இரண்டுமாத முழுநேர செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்
★ எலக்ரிக்கல் வயறிங், வெல்டிங்
இரண்டு மாதம் வெளியிடங்களில் செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்
★ ELECTRICAL ENGINEERING LONDON (EXAM)
★ பட வரைஞர் பயிற்சி DRAUGHTSMAN (COURSE)
★ HOTEL MANAGEMENT
★ FRENCH, GERMAN, ENGLISH
மீண்டும் ஆரம்பம் 05—05—84
JAFFNA TECHNICAL INSTITUTE
52/1 ஸ்ரான்லி வீதி (றெயில்வே கடவை அருகாமை)
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு கிழக்கிலுள்ள

ஆயுதப் படைகளை வாபஸ் பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கிலுள்ள எல்லாப்படைகளையும் வாபஸ் வாங்கவேண்டுமென்றும், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை நீக்கவேண்டுமென்றும், இச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சகல அரசியல் கைதிகளையும் விடுதலைசெய்வதுடன் சகல சந்தேகநபர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கவேண்டுமென்றும் நவசமசமாஜக் கட்சி ஜனதா விமுக்திப் பெரமுன ஆகிய கட்சிகள் மீதான தடை நீக்கப்படவேண்டுமென்றும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஓயிஸ்ட்) தனது மேதின அறிக்கையில் அரசை கோரியுள்ளது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. என் சண்முகதாசனால் இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

"உடனடியாக தமிழ்ச் சிறுபான்மையோரின் பிரச்சனைகளுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு நாம் உறுதியாகப்பாடுபடவேண்டும் என்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு பிரதேச சுயாட்சி வழங்கவேண்டும் என்றும் கோருகிறது.

"வேலையில்லாத்திண்டாட்டம் மேலும் மேலும் அதிகரிக்கிறது. ஜனநாயக உரிமைகள் ஒன்றன்பின் ஒன்றாக மறைந்துவிட்டன. தொடர்ச்சியாக அவசரகாலச்சட்டம் பிரகடனப்படுத்தப்படுகிறது தேசியப் பிரச்சனையான தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சனை மிகச் சிக்கலான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. அரசு வடக்கு கிழக்கு மாகாணத்தில் தனது நிர்வாகத்தை இழந்ததையும், கடந்த ஜூலைக் கலவரமும், தற்போதைய நிலைமையைக் கோடிட்டுக் காட்டுகிறது. நடந்து கொண்டிருக்கும் வட்டமேசை மாநாடு தமிழ் மக்களின் பிரச்சனைக்கு எந்தவொரு தீர்வையும் காணவுமில்லை. காணப்போவதுமில்லை. மேலும் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருந்த நட்புறவு மிகவும் தாழ்ந்த நிலைக்குச்சென்றுள்ளது இவ்வாறு இன்று நமது நாட்டில் மிக மோசமான நம்பிக்கையற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இப்படியான மோசமான குழப்பமான நிலைமையில் மாக்ஸிஸம், லெனினிஸம், மாஓ சேதுங் சிந்தனையுடன் இணைக்கப்பட்ட புரட்சிகர சக்திகள் தங்களை ஒன்றாக இணைப்பதுடன் இந்தக் குழப்பத்திலிருந்து மக்களுக்கு ஒரு புரட்சிகரப் பாதையை காட்ட முன்வரவேண்டும். நாங்கள் நவகாலனித் துவத்தையும், அதன் உள்ளூர் ஏஜெண்டுகளையும் எமது பிரதான எதிரிகளாகத் தனிப்படுத்தி மக்களுக்கு அடையாளம் காட்டவேண்டும். நமது எதிரிகளுக்கிடையில் உள்ள எல்லா முரண்பாடுகளையும் பயன்படுத்த வேண்டும் என அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

வான் விபத்து 5 பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை உயரப்புலம் என்ற இடத்தில் நேற்று மாலை ஏற்பட்ட வான் விபத்தில் 5 பேர் காயமுற்றனர்.

இவர்களில் ஒருவருக்குப் பலத்த காயமென்றும் ஏனையவர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இவ்விபத்தினால் வான் முற்றாக சேதமடைந்தது.

அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

மொழிவழித் தொழிற்சங்க அஞ்சல் எழுதுவினைஞர் சங்கஸ்தாபக தலைவர் திரு வேலுப்பிள்ளை கனகசபைமுதலி அவர்களின் மறைவுக்கு கேட்படி சங்கங்களின் தலைவர்கள் தமது அனுதாபத்தை தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டிற்கு சென்று விட்டு திரும்பிக்கொண்டிருந்த போது இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

காயமடைந்தவரை ஆயுதப் படையினர் நேற்று முன்தினமிரவு தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர் அங்கிருந்து நேற்றுக்காலை, யாழ் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கார் கண்ணாடிகள் உடைந்துள்ளதாகவும், காரினுள் துப்பாக்கி குண்டுகள் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. பொலிஸார் இச்சம்பவம் பற்றி விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ)

மீசோரம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை ஒரு இடம் கிடைத்தது இன்னும் இருஇடங்களின் முடிவுகள் அறிவிக்கப்படவேண்டும்.

இந்திராகாங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் இன்று கூடி தமது தலைவரைத் தெரிவு செய்யவிருக்கிறார்கள்.

புலிகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

9 4-84 அன்றுநாம் இராணுவத்தினர்மீது வெற்றிகரமான வெடிகுண்டுதாக்குதலை மேற்கொண்டோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசு தனது இழப்பினை மூடி மறைத்துவிட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் 10-4-84 அன்று பருத்தித்துறைப் பொலிஸ்நிலையமும் தம்மால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி சம்பவங்களை அடுத்து இடம்பெற்ற சம்பவங்களையும் கண்டிக்கப்பட்டுள்ள அப்பிரசுரம் இவ்வழிவுகளை விடுதலைப்புலிகளுக்கு உரமாகின்றன தாயகத்தை மீட்கும்போராடுவதாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வும் வாய்ப்பேற்படும் என்றார்.

பாகிஸ்தான் அண்மைக்காலமாக தனது படைபலத்தை அதிகரித்துபோர் ஆயுதங்களைக்குவித்து வருவது பற்றி அவர் குறிப்பிடுகையில் இது குறித்து இந்தியா பயப்படத்தேவையில்லையென்றும் எதையும் சமாளிக்கக்கூடிய ராணுவபலம் இந்தியாவிடம் இருக்கிறது என்றும் கூறினார்.

பஞ்சாப்பிற்கு ராஜீவ் விஜயம்

(புதுடில்லி)

பஞ்சாப் மாநில நிர்வாக அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித்தொண்டர்களை திரு. ராஜீவ் காந்தி நேற்று சந்தித்து உரையாடினார்.

பலத்த பாதுகாப்புடனே திரு ராஜீவ்காந்தி இவர்களைச் சந்தித்தார். பஞ்சாப்தீவிரவாதிகளின் கொலை செய்யப்படவேண்டியவர்களின் பட்டியலில் ராஜீவ் காந்தியின் பெயரும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

சீக்கிய போராட்டத்தின் தன்மை தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளே இருப்பதால் அகாலிதள் கட்சியின் இணக்கத்துடன் நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கான உரையாடலை திரு ராஜீவ் காந்தி அங்கு நடத்தினார்.

இவ்வுரையாடல் நடைபெறும் சமயத்திலும் பஞ்சாப் மாநிலத்தில் வன்செயல் இடம்பெற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ)

வெலிக்கடை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

25,27-ம் திகதிகளில் வெலிக்கடைச்சிறையில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக நடைபெற்ற நீதவான் விசாரணையில், படுகொலைக்குக் காரணமானவர்களை சிறை அதிகாரிகளால் ஏன் அடையாளம் காணமுடியவில்லை என்று கேட்கப்பட்டுள்ளதாக கேடி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு புலன் விசாரணைசெய்யுமாறு பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டிருந்த வேளையிலேயே 18 பேர் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனரென அவ்வறிக்கை கூறுகிறது'

பெற்றோல் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இளைஞர் ஒருவர் வெள்ளைச் சேட்டும், நீலக்காற்சட்டையும் மற்றவர் சேட்டுபோடாத சேட்டும், நீலக்காற்சட்டையும் அணிந்திருந்ததாக கூறப்படுகிறது. சம்பவம் நடந்தபோது வெலியில் பெற்றோல் நிலையத்தின் ஒருபம்பர் திறந்தாகவும் கூறப்படுகிறது.

அச்சமயம் பெற்றோல் நிலையத்தில 21. 486ரூபா இருந்ததாகவும் மிகுதிப்பணம் வேறு ஒரு இடத்தில் வைக்கப்பட்டதால் கொள்ளை போகவில்லை என்றும் கூறப்படுகிறது

கொள்ளையடித்த பின் இருவரும் எல்லாம் இயக்கத்திற்குதான் என்று கூறிவிட்டு வீதிவோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த சயிக்கிலில் ஏறிச்சென்றதாகவும் கூறப்படுகிறது

இந்நிலையத்தில் பெற்றோல் விற்பனை நடைபெறுவதினால் பெருந்தொகை பணம் இருக்கவில்லையென்றும் மண்ணெண்ணை, டீசல் விற்ற பணம் மட்டுமே இருந்ததாகவும் கூறப்படுகிறது (க)

திருட்டுக்கள் அதிகரிப்பு

(வண்ணார்பண்ணை)

வேலணைப் பகுதியில் சிறு திருட்டுகள் அதிகரித்து வருவதாக பொதுமக்களால் புகார்கள் செய்யப்பட்டுள்ளன. சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் பகற்பொழுதிலும் இப்பகுதியில் களவாடப்பட்டு வருவதாக புகார்கள் செய்யப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவங்களில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடிப்பதில் இப்பகுதி பொதுமக்கள் பலவித முயற்சிகளைக் கையாண்டபோதும் இதுவரை எவரும் பிடிபடவில்லை என்று தெரியவருகிறது அண்மையில் இப்பகுதியில் சில சைக்கிள் திருடர்களை ஊர்காவற்றுறைப் பொலிசார் கைதுசெய்திருந்தனர்.

வேலணையிலுள்ள உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தின் முன்னால் பூட்டப்பட்டிருந்த சைக்கிளிலிருந்து லைட்டெடைனமோ என்பன களவாடப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

உதவி அரசாங்கஅதிபர் அலுவலக வாசலில் தமது சைக்கிளை நிறுத்திவைத்த ஒருவர் உதவி அரசாங்க அதிபருடன் பேசிவிட்டு திரும்பிவந்து சைக்கிளைப் பார்த்தபோது சைக்கிளில் இருந்த பொருட்கள் களவாடப்பட்டிருந்தனவாம்.

தென்கோரியாவின் இலங்கைத் தூதுவர்

(கொழும்பு)

இலங்கை வெளிநாட்டமைச்சின் பிரதம உபசரிப்பு அதிகாரியான திரு. எம். நவரத்தினராஜா தென்கோரியாவிற்கான முதலாவது இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

மொழியியலாளரான திரு. நவரத்தினராஜா பிரெஞ்சு மொழியில் நிபுணத்துவம் பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது. (லெ)

திருவனந்தபுர..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து எதனையும் கூறவில்லை.

புதிய தளத்தில் எத்தகைய விமானங்களை இந்தியா வைத்திருக்குமென்பது தெரியவில்லை. பெரும்பாலும் கண்காணிப்பு விமானங்களையே அது நிறுத்திவைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. போர் விமானங்கள் பற்றி எதுவும் கூறப்படவில்லை.

இலங்கை விமானப்படையின் முன்னாள் தளபதி ஒருவர் இந்தியாவின் புதிய தளம் பற்றிக் கூறுகையில், திருகோணமலை எண்ணெய்க்குதங்கள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இருக்கலாமென்று தெரிவித்துள்ளார். (வ)

மரண அறிவித்தல்

திருமதி இரத்தினம் வில்வராஜா

கொழும்பு பொலிஸ் கந்தோரின் பிரதான லிகிதர் எஸ். கே. வில்வராஜ வின் அன்பு மனைவி இரத்தினம் காலமாகிவிட்டார் அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரிகை திங்கள் கிழமை 30-4-84 திகதி பி. ப. 8-00 மணியளவில் பருத்தித்துறை ஆலடிப் பிள்ளையார் கோவிலடி இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும்.

உறவினர்களும், நண்பர்களும் இந்த அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

2086

மரண அறிவித்தல்

காசிப்பிள்ளை சுந்தரம்பிள்ளை

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய மகாஜனக் கல்லூரி ஆசிரியர் காசிப்பிள்ளை சுந்தரம்பிள்ளை 28-4-84 அன்று சிவபதம் அடைந்து விட்டார். இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், வில்வராஜா (பூண்டுலோயா எஸ்டேட்), தெய்வீகராணி (லண்டன்), இந்திராணி, கமலராணி, பத்மராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சாரதாதேவி, தணிகாசலபதி (லண்டன்), பத்மநாதன், சதீஷ்குமார், ராமனுதன் ஆகியோரின் மாமனாரும், தமயந்தி, வைஜயந்தி, நிமலன் (லண்டன்), அபிராமி, நிதிபன், மாதங்கி, சஜவதன், ம.வி.தன், சோதை லவன், சிவஅனுஷா, அங்கஜன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (1-5-84) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக அளவெட்டி வடக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதனை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ந. சதீஸ்குமாரன்

மணியர்காடு கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

2085

மரண அறிவித்தல்

வேலுப்பிள்ளை கனகசபைமுதலி

(நல்லூர்)

மொழிவழித் தொழிற்சங்க அஞ்சல் எழுதுவினைஞர் சங்க ஸ்தாபகத் தலைவரும், இளைப்பாறிய காசுக்கட்டளைத் திணைக்கள அத்தியட்சகரும், பொன்னம்மாவின் அன்புக்கணவரும், தியாகராஜா (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய்), நடராஜா காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மட்டுநகர், சிவராஜா (சுவிற்சலாந்து), ஆகியோரின் தந்தையுமாவார் அன்னாரின் ஈமச்சடங்குகள் 30-4-84 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இறுதிக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

கே தியாகராஜா

இராஜவீதி, நல்லூர்.

2087

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் ... வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News paper at the General post office Sri Lanka under number, B 100216/81 Eelanadu P. O. Box 49, Telegram: Eelanadu, Telephone: 23...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org